
www.tamilarangam.net

# அபு ஜிகாத்

சங்கர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலம்
வெளியீடு

சங்கர்

□

அபுஜிகாத்
சில நினைவுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அபுஜிகாத் சில நினைவுகள்**
சங்கர்

முதல் பதிப்பு : 1988 அக்டோபர்

விலை. ரூ. 2-50

வெளியீடு :

**பாலம்,**
12, முதல் பிரதான சாலை,
நேரு நகர்,
அடையாறு,
சென்னை-600 020.

அச்சு :
இராசகிளி பிரிண்டர்ஸ்,
சென்னை-600 020.

*சங்கர்*
*நினைவலைகளில்*
*சில முத்துக்கள்*

# அபுஜிகாத்
## சில நினைவுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அபுஜிகாத் பாலஸ்தீன விடுதலை இயக்க (PLO) நிறுவனர்களில் ஒருவர். பாலஸ்தீன விடுதலை இயக்க இராணுவத் தளபதி.

தன் போர்த்தந்திர கலை வல்லமையால் உலகம் முழுவதும் நடைபெறும் விடுதலைப் போராட்ட எழுச்சிகளில் கவனம் பதித்தவாறே பாலஸ்தீனத்து மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்.

விடுதலையை நேசித்தக் குற்றத்துக்காக எதிரிகளின் சதிச் செயலால் தம் இல்லத்திலிருந்த போதே சுடப்பட்டு மரணமுற்றார்.

விடுதலைப் போரில் வீழ்ந்த அந்த மாமனிதரோடு நெருங்கிப்பழகவும் ஈழப் போராட்ட நெருக்கடி மிக்க நேரங்களில் ஆலோசனைப் பெறவும் வாய்ப்பைப் பெற்றவர் ஈழப் புரட்சி அமைப்பின் புரட்சிகர நிறைவேற்றுக்குழு உறுப்பினர் தோழர் சங்கர்.

நினைவலைகளிலிருந்து அபுஜிகாத்தின் வீரஞ்செறிந்த சம்பவங்களில் சில முத்துக்களைத் தருகிறார் சங்கர்.

தோழர் சங்கருக்கும், கட்டுரையை செம்மைப்படுத்திய சமந்தாவுக்கும் நன்றி.

— *பாலம்*

# அபுஜிகாத்

## சில நினைவுகள்

1988 ஏப்ரல் 14-ல் நான் ஐரோப்பாவில் இருந்த சமயம்; தோழர் அபுஜிகாத் டுனிஷ் நகரில் [டுனிஷியாவின் தலைநகரம்] இருந்தார். அப்போது அவரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். தத்தம் தேசத்துச் சூழலைப் பற்றி பரஸ்பரம் சிறிது நேரம் விவாதித்தோம். பிறகு நாங்கள் இருவரும் மே மாதம் 5 இல் பாக்தாத் நகரில் சந்திப்பதாக முடிவு செய்தோம்.

மீண்டும் நான் டில்லி திரும்பியபோது நம்பமுடியாத அந்த அதிர்ச்சியான செய்தி காத்திருந்தது: ''பாலஸ்தீன விடுதலை அமைப்பின் இராணுவத் தளபதி அபுஜிகாத் இஸ்ரேல் உளவுப் படையினரால் கொல்லப்பட்டார்.''

தோழர் இறந்தார்; இராணுவப்போர் தந்திரக் கலைகளில் முதிர்ந்த அனுபவம் வாய்ந்த மக்கள் தலைவர் இறந்து விட்டார். அபுஜிகாத் 'வாழ்க்கையை மிகவும் நேசித்தார்' என்பதாலேயே, அவர் இஸ்ரேல் அரசுக்கு ஒரு பயங்கரவாதியாக தெரிந்தார். இனவெறி இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை துடைத்தெறியும் போராட்டத்திற்கு மக்களைப் பயிற்றுவித்த, போராட்டப் பாதையை வகுத்துத் தந்த அவரை 'வாழ்க்கையை நேசித்த குற்றத்திற்காக' வஞ்சகமாய் படுகொலை செய்துவிட்டார்கள்.

ஈழப் போராட்டத்தின் சரியான திசை வழியை ஆய்ந்தறிய வேண்டிய நெருக்கடி மிக்க காலகட்டங்களில், கடந்த 12 வருட காலமாக, அவரது 'அரசியல் முன்னெடுப்பு' ஆலோசனைகளும், போராட்ட அனுபவங்களும் எங்களுக்குப்

அ—1

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெரிதும் துணை நின்றன. அவர் இறந்தது, எமது நெஞ்சில் ஒரு உயிர்த் தோழரை இழந்த அதிர்ச்சியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. அவரது மரணம் உண்மையிலேயே ஈழவர் போராட்டத்திற்கு பேரிழப்பாகும்.

இந்நிலையில் நான் அவரது உடல் அடக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முயற்சித்தேன். ஆனால் 'நிகழ்ச்சி நிரல்' முடிவு செய்யப்படாமலிருந்தது. டுனிஷிலிருந்து எடுத்துப் போய் எங்கே அவரை அடக்கம் செய்வது? அம்மானிலா (ஜோர்டான்), டமஸ்கஸ்சிலா (சிரியா) என்பது உறுதிப் படுத்தப்படாததால் குழப்பம் நிலவியது.

இந்தக் குழப்பம் எழுந்ததற்கு காரணமிருக்கிறது. அந்த ஆறு மாதங்களாக மேற்கு கரை (West Bank), காஸா ஸ்ட்ரிப் பகுதிகளில் வீரதீரமிக்க மக்கள் பேரெழுச்சி உக்கிரமடைந்துள்ளமைக்கு பிரதான பங்காற்றியவர் அபுஜிகாத். இதனால் அவரின் உடல் அடக்கம் அம்மானில் நிகழ்வதே மிகவும் பொருத்தம். ஏனெனில் 'அந்நிகழ்ச்சி' மேற்கு கரையில் தீவிரம் அடைந்துள்ள போராட்டத்திற்கு மென்மேலும் அரசியல் தாக்கத்தை (Political Impact) அளிப்பதாக அமையும். ஆனால் PFLP-ன் (Popular Front for the Liberation of Palestine) தலைவர் ஜார்ஜ் ஹபாஷும், DFLP-ன் (Democratic Frond for the Liberation of Palestine) தலைவர் நைப் ஹவத்தமாவும், ''இந்த நிகழ்ச்சியை டமஸ்கஸ்சில் நடத்துவதன் மூலம் பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவர் அராபத்தின் FATAH இயக்கத்திற்கும் சிரியாவிற்கும் இடையே சீர் கெட்டிருக்கும் உறவை சீரமைக்கலாம்'' என்று வலியுறுத்தினர். இந்த முடிவு டமஸ்கஸ்சிலேயே வசிக்கும் அபுஜிகாத்தின் வயதான பெற்றோர்களுக்கும் சகோதரர்களுக்கும் ஏற்புடையதாக இருந்தது. எனவே உடல் அடக்கம் டமஸ்கஸ்சில்தான் என்று இறுதியில் முடிவானது. கடைசி நேரம் வரை இடம் உறுதி செய்யப்படாத இந்தக் குழப்ப



நிலை, நிகழ்ச்சிக்கு செல்வதற்கான பிரயாண ஏற்பாடுகளை செய்ய முடியாதபடிக்கு என்னை முடக்கிவிட்டது.

ஆனாலும் டில்லி பாலஸ்தீன தூதரகத்தில் நடைபெற்ற இரங்கல் நிகழ்ச்சியில் ஈழப் புரட்சி அமைப்பின் (ஈரோஸ்) டில்லி பிரதிநிதி நேருவும், தோழர் ரத்னாவும் கலந்து கொண்டு, தூதுவர் ஹாலித்-அலி-ஷேக் அவர்களிடம் ஈரோஸ் சார்பாகவும், ஈழவர் சார்பாகவும் தமது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்தனர்.

தாய்நாடு மீட்புக்கும், தற்காப்புக்குமான போராட்டத்தில் பாலஸ்தீன மக்களை, விடுதலையை நோக்கி வழிநடத்திச் சென்றவர் அபுஜிகாத். அவர் சர்வதேச அளவில் ஒடுக்குவோருக்கு எதிரான போராட்ட இயக்கங்களுக்கு தனது மகத்தான ஆதரவை வழங்கினார். அவர் கொலையுண்ட கோரநிகழ்ச்சி உலகெங்குமுள்ள மனிதாபிமானிகளுக்கும், மக்கள் போராளிகளுக்கும் வருத்தத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. துயரம் தோய்ந்த இப்பொழுதில் அவரிடம் நாம் கற்ற படிப்பினைகளும், அவருக்கும் எமக்கும் வலுவான இடை உறவாய் உருவான நட்பும், ஈழப்போராட்டத்திற்கு வலிமை சேர்த்த அவரது சில அரிய ஆலோசனைகளும் எம் நினைவில் மிளிர்கின்றன. அவரை முதன் முதலாக சந்தித்த நிகழ்ச்சியை நினைவு கூர்கிறோம்.

அப்போது 1976 ஆம் ஆண்டு. லெபனானில் கிறிஸ்துவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் உள்நாட்டுப்போர் மூண்டு பெய்ரூட் நகரம் எரிந்து கொண்டிருப்பதாக லண்டன் பத்திரிகைகளில் படித்தோம். இதிலிருந்து மூன்றாவது நாள், ஏற்கனவே திட்டமிட்டிருந்ததன்படி, லெபனானுக்கு விமானத்தில் பயணமானோம். என்னுடன் கானக்சும், அருளரும் வந்தார்கள். 350 இருக்கைகளைக் கொண்ட அந்த விமானத்தில் எங்கள் மூவரையும் சேர்த்து மொத்தம் 14 பேரே பயணம் செய்தோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெய்ரூட் நகர் மீது விமானம் தாழ்வாக பறக்கத் தொடங்கிய போது நாங்கள் அதிர்ந்து போனோம். கண்ட காட்சிகள் நெஞ்சைப் பிசைந்தன. நகரம் முழுவதையும் குரூரம் கவ்வியிருந்தது. எரிந்து ஜ்வாலை அடங்கிப்போய் கட்டிடங்கள் புகைந்து கொண்டிருந்தன. நகரம் சுடுகாடாய் தோற்றங்காட்டியது. விமானத்திலிருந்து இறங்கி வெளி வந்த எங்களுக்கு விமான நிலையம் ஒரு இராணுவமுகாம் போல் தோன்றும்படிக்கு, ஆயுதம் தரித்த இராணுவவீரர்கள் அங்கே மந்தை மந்தையாய் நிறைந்து கிடந்தனர். கொடிய ஆயுதங்களை நிறைந்த அளவில், மிக நெருக்கத்தில், இதற்கு முன்னர் நாங்கள் கண்டதில்லை. போராடுவோர்கள் இந்த ஆயுதங்களின் கீழ் எப்படியெல்லாம் ஒடுக்கப் படுவார்கள்? நினைக்கவே பயங்கரமாய் இருந்தது. சூழல் மூச்சை நெரிக்கும் அவ்வேளையில், FATAH இயக்கப் பொறுப்பாளர்கள் இராணுவ வீரர்களை நோக்கி 'இவர்கள் எங்கட ஆட்கள்' என்று ஆங்கிலத்திலும், அரேபிய மொழியிலும் குரலிட்டவாறே எங்களை நோக்கி வந்தபோதுதான், நிராயுதபாணி நிலையிலிருந்து விடுபட்ட உணர்வை நாங்கள் பெற்றோம்.

உடனடியாக அங்கு நின்ற செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் ஆயுதந்தாங்கிய பாலஸ்தீன தோழர்களின் பாதுகாப்புடன் மேற்கு பெய்ரூட் PLO (Palestine Liberation Organisation) செயலகத்திற்குச் சென்றோம். வழியெங்கும், கொல்லப்பட்டு சிதிலமடைந்த உடல்கள்...கிளைகள் சிதறி வேரடி மண்ணோடு வீழ்ந்து கிடக்கும் மரங்கள்...இடிபாடுகளிடையே எரிந்து புகையும் கட்டிடங்கள்...கொடூரத்திலும் கொடூரமான சூழல். நெஞ்சு பதற, கண்கள் துடி துடித்துச் சுழல, முற்றிலும் புதிதான பயங்கர உலகில் இருப்பதைப் போன்ற உணர்வு எங்களுக்கு.

கிரீன்லைன் சாலைதான் கிறிஸ்துவர்கள் வாழும் கிழக்கு பெய்ரூட்டையும் முஸ்லீம்கள் வாழும் மேற்கு பெய்ரூட்டையும் பிரிக்கின்றது. கிறிஸ்துவர்களுக்கும் முஸ்லீம்களுக்குமான இந்த உள்நாட்டுப் போரைப் பற்றி ஏற்கனவே நாங்கள் பத்திரிகைகளில் படித்தபோது அந்த சாலையும் அறிமுகமாகியிருந்தது. ஆபத்துமிக்க அந்த கிரீன்லைன் சாலை வழியாகத்தான் எங்கள் வாகனம் விரைவதை அறிந்தோம்.



செயலகம் போய் சேர்ந்ததும், அங்கே PLO-வின் மத்தியக்குழு உறுப்பினர் அபு-மெம்சரை சந்தித்து அவரிடம் எங்களை அனுப்பி வைத்த லண்டன் PLO பிரதிநிதி சாயித் ஹமாமின் அறிமுகக் கடிதத்தைக் கொடுத்தோம். பிறகு ஈழமண்ணில் பிறந்தவர்களாய் அவரோடு உறவு கொள்ளும் விதத்தில் எம் மக்களின் இரத்தத்திற்கு ஈடான தேயிலை நிரம்பிய பாக்கெட்டுகளை அவருக்குப் பரிசளித்தோம்.

அதன்பின், தூரத்தில் குண்டுகள் வெடித்தெழும் அந்த அசுரப் பொழுதில், அங்கிருந்து சுற்றிலும் பலத்த பாதுகாப்புடன் மேடு பள்ளங்கள் நிறைந்த ஒரு மலைப்பாதை வழியே பெக்கா பள்ளத்தாக்கை நோக்கி நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். இறுதியில், Fatah-வின் கட்டுப்பாட்டுக்குள் இயங்காது விடப்பட்டிருந்த ஒரு தொழிற்சாலையை வந்தடைந்தோம். PLO உயர் இராணுவ அதிகாரிகளை நாங்கள் எதிர்பார்த்து நின்ற அந்த இடம் 'சத்தூரா'-சிரியா எல்லையிலிருந்து 6 கி. மீ. தொலைவிலிருந்தது.

சிறிது நேரத்தில் பலத்த ஆயுத பாதுகாப்புடன் வந்து சேர்ந்த வாகனங்களிலிருந்து ஆயுதந்தரித்தவாறும், சாதாரண உடையிலுமாய் ஆறேழுபேர் இறங்கி எங்களை அணுகி "Welcome Comrades" என்றார்கள். பிரயாணத்தைப் பற்றியும், பெய்ரூட் சந்திப்பு குறித்தும் ஆவலோடு விசாரித்தார்கள். லண்டன் PLO பிரதிநிதி சாயித் ஹமாமியையும், ஈரோஸ் தோழர் ரத்னாவையும் பற்றி அக்கறை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யோடு கேட்டார்கள். பிறகு தம்மைப் பற்றிய அறிமுகத்தை மேற்கொண்டார்கள். அவர்களில் கம்பீரமான தோற்றத் தோடு இராணுவ உயர் அதிகாரி போலிருந்த ஒருவர் எங் களை தனிப்பட்ட முறையில் விசாரித்தார். எங்களுக்கு பொறியியல் துறையில் அனுபவம் இருப்பதை அறிந்து கொண்ட அவர், ''அப்படியானால் நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும். எங்கள் பண்ணையில் ஒரு உழவு எந்திரம் பழுதாகி விட்டது. அதை நீங்கள் நாளை காலை யில் சரி பார்த்துத் தந்தால் எமது விவசாயிகளுக்கு பெரிதும் பயனளிப்பதாக இருக்கும். இன்று நன்றாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

இராணுவப் பயிற்சி பெறச் சென்ற எங்களை அந்த அதிகாரி விவசாயிகளுக்கு உதவ அழைத்தது சற்றே திகைப் பைத் தந்தது. பிறகு அவர் எங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து விட்டு அகன்றார். அதன் பிறகு, அவர் யார் என்பதை அறியும் ஆவலோடு அங்கிருந்த வேறு சில பாலஸ்தீன தோழர்களை கேட்டோம். அவர்தான் PLO-வின் இராணுவத் தளபதி அபுஜிகாத் என்பதை அறிந்து வியந் தோம். இதுவே எங்களின் முதல் சந்திப்பு.

அக்காலத்தில் குரூர யுத்தச் சூழல் லெபனானில் நிலவிய தால் - சிரியா - டமஸ்கஸ்சில் ஹமூரியா எனும் இடத்தி லிருந்த பாலஸ்தீன பயிற்சி முகாமில் கேப்டன் மஜூத் தலைமையில் இராணுவப்பயிற்சி நடந்தது. அது ஒரு சர்வ தேச பயிற்சி முகாம். பிரான்ஸ், ஈரான், குர்துஸ்தான், உகண்டா, ஐரீஸ், நிகரகுவா, ஜெர்மன் மற்றும் அரபு நாடுகளான குவைத், சவுதி, எகிப்திலிருந்தெல்லாம் பயிற் சிக்கு வந்திருந்தார்கள். இவர்களோடு நாமும் பயிற்சி பெற்றோம். பயிற்சி ஆரம்பித்து இரண்டு வாரத்தில் முகா மிற்கு வந்த PLO தலைவர் அராபத், எங்கள் போராட்டத் தையும், எங்களையும் பற்றி தீர விசாரித்து தெரிந்து கொண்டார். எங்கள் பயிற்சி தொடர்ந்தது.



இந்த சந்தர்ப்பத்தில் பாலஸ்தீன விடுதலைப் போரை யும், அதன் வரலாற்றையும் மேலும் தெளிவாக அறிந்து கொண்டோம். அதோடு, பயிற்சிக்கு வந்த மற்ற நாட் டினரின் பிரச்சனைகளையும், அந்நாடுகளின் போராட்டச் சூழலையும் ஆழ்ந்து அறிந்து கொள்ளும் வாய்ப்பும் எங் களுக்கு கிடைத்தது. பாலஸ்தீனம் மற்றும் ஏனைய தேசத்து தோழர்கள் ஈழப் போராட்டத்தின் முக்கியத்துவத் தையும் மிகுந்த அக்கறையுடன் கேட்டறிந்து தங்களது ஆதரவையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். அவர் களோடு வாழ்ந்த காலம் மறக்க முடியாதது. ஈழப் போராட்டத்தை தீரத்தோடு முன்னெடுக்க வேண்டி, முதன் முதலாக வெளிநாட்டில் இராணுவப் பயிற்சி பெறச் சென்ற ஈழவர்கள் நாங்களே என்பதால் ஈழப் போராட்டத்தின் வலிமையையும், வெற்றியையும் உறுதிப்படுத்தும் வகை யில், சகலவிதமானப் பயிற்சிகளையும் அங்கே பெற்றோம்.

பயிற்சி காலத்தின்போதும் அபுஜிகாத்துதான் இராணுவத் தளபதியாக இருந்தார். பயிற்சி முகாமிலிருந்து போர் முனைக்கு நாங்கள் அனுப்பப்பட்டபிறகே அவரை அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பங்கள் வாய்த்தன. அங்கே இராணுவத் தயாரிப்பு வேலைகளை கவனிப்பதற்கென்று அவர் அடிக்கடி வருவது வழக்கம். வரும்போதெல்லாம் எங்களை அணுகி, ''பயிற்சி காலத்தில் நீங்கள் கற்றதென்ன? வேறு எவற்றில் உங்களுக்கு பயிற்சி தேவை?'' என்றெல்லாம் கேட்பார்.

அந்த வேளைகளில் அவரின் சகல ஆளுமைகளையும் தெரிந்து கொண்டோம். கட்டளை மையத்தில் (Command Centre) இருக்கும் வரைபடங்களை காட்டி போர்முனையில் எங்களது நகர்வுகளின் திசையையும், அவை எப்படி அமைய வேண்டும் என்பது பற்றியும் அவர் விளக்கிச் சொல்வார். விமான எதிர்ப்புப் பீரங்கிகள், கட்சுசியா ஏவுகணைகள், ஸ்கட் ஏவுகணைகள் போன்ற நவீன ஆயுதங்கள் கையாளப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படும் சமயங்களிலெல்லாம் கண்காணிப்புக்காக அவர் எப்போதும் இருப்பார். எல்லா இராணுவ முகாம்களின் நிலையையும் நேரில் சென்று அறிவார். அவருக்கு இரவும் இல்லை; பகலும் இல்லை. நேரம் காலம் பார்க்காமல், தற்பாதுகாப்பு குறித்த அச்சம் துளியுமின்றி, போர்முனை முகாம்களுக்கு அடிக்கடி வந்து போவார். அவர் எங்கே எப்போது ஓய்வு எடுப்பார் என்பது அனைவருக்கும் புரியாத புதிராகவே தோன்றியது.

போர்முனைக்கு வந்திருந்த ஒரு சமயம் அபுஜிகாத் ஈழ மக்கள் படும் துன்பங்களையும் அவற்றை அவர்கள் எதிர் கொள்ளும் விதம் குறித்தும் கேட்டறிந்தார். அப்போது நாங்கள், ''இதுபோன்ற பயிற்சியை எங்களில் குறைந்தது இன்னும் 50 பேர்களாவது பெறுவார்களானால் எம் மக்களை ஆயுதபாணிகளாய் பயிற்றுவிக்கும் பணி எங்களுக்கு மிக எளிதாக இருக்கும்" என்றோம். அதற்கு பதிலாக அவர் மெலிதாக புன்னகை செய்தார். பிறகு அறிவுரை சொல்லும் தொனியில், ''நண்பர்களே! என் அனுபவத்தில் கற்ற ஒன்றை சொல்லுகிறேன். அதை எப்போதும் மனங்கொள்வது நல்லது. அதாவது, முதலில் நீங்கள் உங்கள் பலத்தை நம்பவேண்டும். ஒருவர் மட்டுமே தேவைப்படுகிற வேலைக்கு இருவரை நியமிப்பது தவறு. இன்னும் ஐம்பது பேருக்கு பயிற்சி தேவையில்லை. பல நூற்றுக்கணக்கான 'ஐம்பது பேர்களை' நீங்கள் மூவருமே உருவாக்கிக் காட்ட முடியும். அதற்கேற்ப உங்களது தேவைகள், பயிற்சிகள் எல்லாவற்றையும் நல்லமுறையில் நிறைவேற்றுங்கள். நம்பிக்கையோடிருங்கள்" என்றார்.

அவ்விதமே சகல பயிற்சிகளிலும் கைதேர்ந்தோம். ஆயுதப் போராட்டத்தை மேற்கொள்வதற்கான முன் நிபந்தனைகளை அங்கு பெற்ற அனுபவங்களின் வாயிலாக அறிந்தோம். இவ்வாறாய் எங்களில் வித்தியாசமான புதிய பரிமாணங்களை நிகழ்த்திய அந்தப் பயிற்சிகாலம் முடிந்தது.



சரி! இனி திரும்ப வேண்டும். ஆனால் பணம் இல்லாத நிலை எங்களை வருத்தியது. அந்த நேரம் பார்த்து அபுஜிகாத் எங்களை அவரது இல்லத்துக்கு அழைத்தார். சென்றோம். அவர் அங்கிருந்த வேறு இரு உயர் அதிகாரிகளை அறிமுகப்படுத்தினார். பிறகு பயிற்சி திருப்தியாய் அமைந்ததா? என்றார். 'மிகவும் திருப்தி' என்றோம். எங்களது போராட்டத் தேவைகளை ஆர்வத்தோடு கேட்டறிந்தார். எங்களுக்குள்ளோ பணமில்லா நிராதரவான நிலையை எப்படி அவருக்கு தெரியப்படுத்துவது? என்ற கேள்வி குமைந்து கொண்டிருந்தது. கடைசியில் தயங்கித் தயங்கி சொல்லிவிட்டோம். இதை ஏற்கனவே எதிர்பார்த்ததைப் போல் அவர் பலத்த குரலில் சிரித்தார். பிறகு அவருக்கு பக்கத்திலிருந்த ஒரு அதிகாரியை காட்டி, ''உங்களை நல்லவிதமாய் திருப்பி அனுப்பும் பொறுப்பையெல்லாம் இவர் கவனித்துக் கொள்வார். நீங்கள் கிளம்புங்கள்; மறுபடியும் நாம் சந்திக்கும் போது விபரமாக பேசலாம்" என்றார்.

பயிற்சி முடிந்து திரும்பும் வேளையில் இந்த சந்திப்பு சிறிது நேரமே நிகழ்ந்தது என்பது எங்களுக்கு சற்றே ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. எனினும், அபுஜிகாத் வெகு சீக்கிரத்தில் எங்களுக்கு விடை கொடுத்த விதம் ''உங்களது போராட்டம் தயார் நிலையில் இல்லை. தயார் நிலைக்கு வரும் காலத்தில் நாம் சந்திப்போம்'' என்று மறைமுகமாய் எங்களுக்கு உணர்த்தியது. நாங்கள் நன்றி கூறி விடை பெற்றோம்.

லண்டன் திரும்பியதும் காலதாமதம் செய்யாமல் நாங்கள் ஈழத்திற்கு திரும்பினோம். லண்டனிலும் சரி; ஈழத்திலும் சரி; எமது தோழர்களும் மக்களும் முதன்முதலாக வெளிநாட்டில் இராணுவப் பயிற்சி பெற்று திரும்பிய எங்களை ஆர்வத்தோடு வரவேற்றார்கள். அவர்கள் எல்லோரிடமும் இராணுவப்பயிற்சியின் சகல நுணுக்கங்களையும் தாமும் கற்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டும் என்ற துடிப்பு நிறைந்திருந்தது. ஏனெனில் அப்போதைய ஈழத்து அவலச் சூழல் ஆயுதமேந்திய போராட்ட வழிமுறையையே தேர்வு செய்யும்படி ஈழவர் அனைவரையும் நிர்பந்தித்தது. ஆயுதப் பயிற்சியும் விடுதலைப் போராட்ட இயக்கங்களுடனான தொடர்பும் எங்களுக்கு அப்போது அவசர அவசியமிருந்தது. அந்த காலக்கட்டத்தில் இதுபோன்ற ஆயுதப் பயிற்சியை PLO போன்ற விடுதலைக்காக போராடும் இயக்கங்களே ஏற்று நடத்தி வருவதை அறிந்து எமது மக்கள் மகிழ்ச்சியும், நம்பிக்கையும் பெற்றார்கள்.

துப்பாக்கிச் சனியனை ஏந்திப் போராட வேண்டிய காலக் கட்டாயத்தில், ஈழப் போராட்டத்திற்கான முன் தயாரிப்பு வேலைகளில் எமது மக்களுக்கு ஆயுத பயிற்சி அளிப்பதையே பிரதான பணியாகக் கருதி செயல்பட்டோம். நாங்கள் பெற்ற கடினமான பயிற்சியையும் அனுபவங்களையும் எமது மக்களோடு பகிர்ந்தோம்; அவர்களை பயிற்றுவித்தோம். கூட்டங்கள் வாயிலாய் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தோடு எமக்குள்ள தொடர்பையும் உறவையும் எடுத்துக் கூறினோம்; பாலஸ்தீன விடுதலைப் போராட்ட வரலாற்றை விளக்கிச் சொன்னோம்.

ஈழம் நிர்மாணிக்கப்பட வேண்டிய, சிங்கள இனவெறி இராணுவத்தின் ரத்த பயங்கரமிக்க ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஆயுதமேந்தி எழ வேண்டிய காலத்தின் தேவையை உணர்ந்து எண்ணற்றோர் ஆயுதபயிற்சியை பெற விழைந்து முன்வந்தார்கள். வயது வரம்பின்றி ஏராளமான இளைஞர்களும், முதியோர்களும் சாவை துச்சமாய் மதித்து ஆயுதப் போராட்டத்தில் பங்கேற்க முழுமனதோடு விருப்பம் தெரிவித்தார்கள். இந்த நேரத்தில் அபுஜிகாத் கூறியதைப்போல இவர்கள் அனைவருக்கும் ஆயுதப்பயிற்சி அளிக்க நாங்கள் மூவரே போதும் என்பது சாத்தியமானதாக தோன்றவில்லை. எனவே நிலைமைகளை விளக்கி, ''போராட்டம் வேகமாய் முன்னேறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில்



அதை மேலும் விரைவுபடுத்த வேண்டுமென்றால் இன்னும் சிலருக்கு ஆயுதப் பயிற்சியை நீங்கள் அளித்துதவ வேண்டும்'' என்று அபுஜிகாத்திற்கு செய்தி தெரிவித்தோம். அவரும் நிலைமையைப் புரிந்து எங்கள் கோரிக்கையை ஏற்றார்.

எமது தோழர்கள் சிலர் பயிற்சிக்கென்று பெய்ரூட் சென்றார்கள். அவர்களைக் கவனிக்கும் பொறுப்பாளராய் நான், செயலதிபர் ரத்னாவால் நியமிக்கப்பட்டேன். பிறகு அவரது பணிப்பை ஏற்று நானும் பெய்ரூட்டுக்கு பயணமானேன். மனத்தில் மறுபடியும் அபுஜிகாத்தை சந்திக்கப் போகிறோம் என்ற சந்தோசம் நிறைந்திருந்தது.

நான் பெய்ரூட் சென்றடைந்து அபுஜிகாத்தை சந்தித்தேன். அவரும், அவரின் ஆலோசகர்களும், ஈழம் சென்று திரும்பிய என்னிடம் இடைப்பட்ட காலத்தில் அங்கு நடந்தேறிய அரசியல் நிகழ்வுகளையும், ஈழ மக்களது புரட்சி நிலை பற்றியும் கேட்டறிந்தார்கள். ஈழப் போராட்டத்தின் எதிர்காலம் மீது மிகுந்த அக்கறை கொண்டு விவாதித்தார்கள்.

எமது தோழர்களுக்கு தெற்கு லெபனானில் டியர் (Tyre) எனும் நகரிலிருந்த பயிற்சி முகாமில் சகல வசதிகளுடன் பயிற்சியளிக்கும் பொறுப்பை கமேண்டர் உமரிடம் (Omar) அபுஜிகாத் ஒப்படைத்தார்.

பெய்ரூட் PLO அலுவலகத்தில் நான் தங்கினேன். அவ்வப்போது அங்கிருந்து 40 கி.மீ. தொலைவிலிருக்கும் பயிற்சி முகாமிற்குச் சென்று தோழர்கள் பயிற்சி பெறுவதை கண்காணித்து வந்தேன்.

அப்போது, பல அரபுநாட்டு இராணுவங்களை இணைத்துக்கொண்டு ''அரபு அமைதி காக்கும் படை'' (Inter Arab Peace Keeping Force) எனும் பெயரோடு லெபனானுக்குள் சிரியா தலையிட்டிருந்தது. வெளிவந்தால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வழியெங்கும், இந்தப் படையினரின் கடும் பரிசோதனைகளுக்கு ஆளாக வேண்டியிருந்தது. அவர்களிடம், ஒரு பங்களாதேஷிய பத்திரிக்கையாளனாய் என்னை அறிமுகப்படுத்தி தப்பித்து வந்தேன்.

பெய்ரூட்டில் தங்கி வாழ்ந்த இக்கால கட்டத்தில்தான் அபுஜிகாத்தை அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பங்களும், அவரோடு நெருங்கிப் பழகும் பாக்கியமும் எனக்கு வாய்த்தது. அவர் தனிப்பட்ட முறையில் எனக்கும் மற்றும் ஈழப்போராட்டத்திற்கும் எவ்வகையில் ஆதர்சமாக இருந்தார் என்பதை தெரிந்து கொள்ளவேண்டுமென்றால், போராட்டத்தை இனிய வாழ்க்கை முறையாக கொண்ட அவரைப் பற்றி நாம் யாவரும் அறியவேண்டும்.

அபுஜிகாத் பாலஸ்தீன மக்களின் புயலும் துயரும் நிறைந்த போராட்டத்தின் வளர்ச்சிப் பாதையில் செயலுக்கான வழிகாட்டியாய், மக்கள் இராணுவத்தின் தலைமையில் நின்றார். தாய்நாட்டுப் பற்று, விடுதலை வேட்கை, உறுதி, வீரம் ஆகியவற்றின் சின்னமாகத் திகழ்ந்தார். இந்தப் போராட்ட யுகத்தின் மாபெரும் போராளித் தலைவராய் கீர்த்தியெய்திய அபுஜிகாத் பாலஸ்தீனத்திற்கு மாத்திரமல்ல, மீட்சிக்காகப் போராடும் மனிதகுலம் முழுமைக்கும் உரித்தானவர்.

இந்த மகத்தான மனிதர் போராடிய மரபை, அவரது பணிகளின் சமூக சாரத்தை, தனிச் சிறப்புகளை துயரஞ்செறிந்த வாழ்வை நாம் அனைவரும் கற்றாராய்ந்து, அவரின் சிறப்பம்சங்களை ஒரு 'போராட்ட ஆயுதமாக' கைக்கொண்டு 'தன் மரணத்திற்குப் பின்னும் அவர் வாழ்வதை' உலகிற்கு நாம் எடுத்துக்காட்ட வேண்டும்.

அபுஜிகாத், கலீல் இப்ராகிம் அல்-வாஷிர் எனும் இயற்பெயரில் அழைக்கப்படாமல், 'அபுஜிகாத்' என்று மக்களால் சிறப்புப் பெயர் சூட்டப்பெற்றார். அபுஜிகாத் என்பதன்



அர்த்தம் ''புனித யுத்தத்தின் மைந்தன்'' (Son of the Holy War) ஆகும்.

யார் இந்த அபுஜிகாத்?

அவர் பாலஸ்தீனத்தின் 'போர்க்கோலத் தோற்றத்தை' நிர்ணயித்தவர். பாலஸ்தீன விடுதலை அமைப்பின் (PLO) நிறுவனர்களில் முக்கியமானவர். சக்தி மிக்க இராணுவத் தளகர்த்தர். மக்களின் நம்பிக்கைக்கு உகந்த இனிய தலைவர். புரட்சிகர எழுத்தாளர். மாபெரும் மனிதர்.

1988 ஏப்ரல் 16-ம் தேதி இஸ்ரேலின் நாசக்கார உளவுப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நெஞ்சீரமற்ற நயவஞ்சகப் படுகொலை! அபுஜிகாத் மறைந்தார்; ஆனால், பாலஸ்தீன வரலாற்றின் மிக சிக்கலான நிலைமைகளின் போராட்ட அனுபவங்களை அவர் விட்டுச் சென்றுள்ளார். அவர் கொலை செய்யப்பட்டதானது பாலஸ்தீனர்களின் அரசியல் உணர்வுமீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, போராட்டத்தின் பரிணாமத்திற்கு மேலும் வளம் சேர்ந்துள்ளது. அவரின் போராட்ட வாழ்க்கை மானுட சுபிட்சத்திற்காக வாழ்வை முழுவதுமாய் அர்ப்பணிக்கும் மனப்பாங்கிற்கு முன்னுதாரணமாகவும், புரட்சிகரப் போராட்டத்தின் செயல் வீரத்திற்கு நிகரற்ற எடுத்துக்காட்டாகவும் விளங்கியது.

பாலஸ்தீனத்திற்கு 'யுத்தத்தின் மைந்தனாய்' இப்ராகிம்-பௌஷியா அல்வாஷிர் தம்பதியருக்கு மகனாய், ரம்லா எனுமிடத்தில் அபுஜிகாத் 1935ஆம் ஆண்டு பிறந்தார்.

1948 இஸ்ரேலியரின் ஆக்கிரமிப்பை எதிர்த்து மக்கள் கொதித்தெழுந்த காலம். டெல் அவிவ்—ஜெருசெலம் நகர்களுக்கிடையே ஒரு சாலையை நிறுவும் பொருட்டு, இஸ்ரேலியப் படைகள் அபுஜிகாத்தின் சொந்த ஊரான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரம்லாவை ஆக்கிரமிப்பு இலக்காகக் கொண்டு தாக்கின. ரம்லா மக்களின் பாதுகாப்புக்காக அங்கு பிரிட்டிஷ் தலைமையில் தங்கியிருந்த ஜோர்டானியன் படைகள் இஸ்ரேலுக்கு எதிராய் போரிடாமல் திடீரென பின்வாங்கிக் கொண்டன. இதனால் ரம்லா இஸ்ரேலியரால் ஆக்கிரமிக்கப்பட்டு, அதன் மக்கள் 'இனி திரும்பி வரக்கூடாது' என்ற எச்சரிக்கையோடு அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்கள். ஆக்கிரமிப்பை எதிர்த்த ரம்லா மக்களின் போராட்டம் ஒடுக்கப்பட்டது.

ரம்லாவில் நிலவிய அப் போர்க்காலச் சூழலில், மக்கள் அருந்த நீரும் உணவுமின்றி இன்னலுற்றார்கள். தெருவோரங்களில் வயோதிகர்கள், குழந்தைகள் பலர் கொல்லப்பட்டார்கள். இச்சூழலில் உழன்று, போரின் பயங்கரத்தை நேரில் கண்ட சாட்சிகளில் ஒருவனாக, 13 வயதே நிரம்பிய சிறுவனாக—பின்னாளில் அபுஜிகாத்தாக அறியப்பட்ட—கலில் அல் வாஷிர் இருந்தார். இக்காலத்தில் தம் உடைமைகளை இழந்த அபுஜிகாத்தின் குடும்பம், ரம்லாவிலிருந்து வெளியேறி காஜா ஸ்ரிப்ட் அகதி முகாமை வந்தடைந்தது.

அபுஜிகாத் அங்கிருந்த அகதிமுகாம்களில் வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனர்களோடு இளம் பருவ நாட்களை கழித்து, அங்கேயே தன் பள்ளிப்படிப்பையும் முடித்தார். 1954-ல், காஜா ஸ்ரிட்பில், அபுஜிகாத் தனது நெடிய போராட்ட வாழ்வில் இறுதி காலம்வரை துணைவந்த யாசர் அராபத்தை சந்தித்தார். 1956-ல் எகிப்துக்குச் சென்று அலெக்ஸாண்ட்ரியா பல்கலைக் கழகத்தில் படிப்பைத் தொடர்ந்தார். பிறகு சவுதி அரேபியாவிலும், குவைத்திலும் வேலை செய்தார்.

குவைத்தில் தான் செய்த வேலையை உதறிவிட்டு பாலஸ்தீன விடுதலைக்கான ஒரு போராட்டக் குழுவை அங்கே நிறுவி அதற்கு தலைமையேற்று நடத்தினார். அக்கால கட்டத்தில் பல்வேறு இடங்களில் பலப்பல பாலஸ்தீன போராட்டக் குழுக்கள் இயங்கி வந்தன. இவ்விதமாய் சிதறிக் கிடக்கும் விடுதலை சக்திகளை ஒருங்கிணைக்கவும், வெகுஜனங்கள் மத்தியிலும், சர்வதேச அளவிலும் போராட்டத்திற்கு ஆதரவைவென்றெடுக்கவும், மக்களின் புரட்சியாற்றலை செயலுக்குத் திருப்பவும், ஒரு திறன்மிக்க தொடர்புச் சாதனம் தேவைப்படுவதை அபுஜிகாத் உணர்ந்தார். ப்லாஸ்டினுனா (Filastinuna—Our Palestine) எனும் புரட்சிகரப் பத்திரிக்கையைத் தொடங்கி அதற்கு ஆசிரியராய் பொறுப்பேற்று நடத்தினார். அதில் பல அரசியல் கட்டுரைகளை எழுதினார்.

இந்தக் காலகட்டத்தில்தான் அபுஜிகாத்தும், யாசர் அராபத்தும் இணைந்து ஃபாத்தா (Fatah) எனும் பாலஸ்தீன தேசிய விடுதலை இயக்கத்தை நிறுவினார்கள். பிறகு அனைத்து விடுதலை சக்திகளையும், பாலஸ்தீன விடுதலை அமைப்பு (PLO) எனும் 'ஒரே மையத்தைச் சுற்றி' ஒன்றிணைத்தார்கள்.

ஃபாத்தா இயக்கத்தை பாலஸ்தீன விடுதலை அமைப்பில் வேர் கொள்ளச் செய்ததிலும், பாலஸ்தீன மக்களது பொது வாழ்வின் சகல தளங்களிலும் பி. எல். ஓ.வின் பிடிப்புகளை உறுதிப்படுத்துவதிலும், ஒழுங்கின்றிச் சிதறியிருந்த பாலஸ்தீனத்தின் பல்வேறு வகுப்பினரை, ஒரே கருத்து நிலையில், பி. எல். ஓ. வின் தலைமையின் கீழ் கொணர்வதிலும் அபுஜிகாத் பிரதான பங்காற்றினார்.

1963ல் அல்ஜீரியாவிற்குச் சென்று 'ஒரு அரபு நாட்டில் முதன் முதலாக அமைக்கப்பட்ட' பாலஸ்தீனப் புரட்சி செயலகத்திற்கு தலைமைப் பொறுப்பேற்றார். அங்கிருந்த வாறே, கடின முயற்சி எனும் தன் குணச் சிறப்பால், பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கும் சர்வதேச புரட்சிகர சக்திகளுக்கும் பரஸ்பர கருத்தொற்றுமை கூடிய தொடர்பை அறுக்க முடியாத பந்தமாய் நெய்தார்.

சீனாவுடனும் கியூபாவுடனும் மற்றும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளின் போராட்ட இயக்கங்களுடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரம்லாவை ஆக்கிரமிப்பு இலக்காக கொண்டு தாக்கின. ரம்லா மக்களின் பாதுகாப்புக்காக அங்கு பிரிட்டிஷ் தலைமையில் தங்கியிருந் ஜோர்டானியன் படைகள் இஸ்ரேலுக்கு எதிராய் போரிடாமல் திடீரென பின்வாங்கிக் கொண்டன. இதனால் ரம்லா இஸ்ரேலியரால் ஆக்கிரமிக்கப்பட்டு, அதன் மக்கள் 'இனி திரும்பி வரக்கூடாது' என்ற எச்சரிக்கையோடு அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்கள். ஆக்கிரமிப்பை எதிர்த்த ரம்லா மக்களின் போராட்டம் ஒடுக்கப்பட்டது.

ரம்லாவில் நிலவிய அப் போர்க்காலச் சூழலில், மக்கள் அருந்த நீரும் உணவுமின்றி இன்னலுற்றார்கள். தெருவோரங்களில் வயோதிகர்கள், குழந்தைகள் பலர் கொல்லப்பட்டார்கள். இச்சூழலில் உழன்று, போரின் பயங்கரத்தை நேரில் கண்ட சாட்சிகளில் ஒருவனாக, 13 வயதே நிரம்பிய சிறுவனாக—பின்னாளில் அபுஜிகாத்தாக அறியப்பட்ட—கலில் அல் வாஷிர் இருந்தார். இக்காலத்தில் தம் உடைமைகளை இழந்த அபுஜிகாத்தின் குடும்பம், ரம்லாவிலிருந்து வெளியேறி காஜா ஸ்ரிட்ப் அகதி முகாமை வந்தடைந்தது.

அபுஜிகாத் அங்கிருந்த அகதிமுகாம்களில் வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனர்களோடு இளம் பருவ நாட்களை கழித்து, அங்கேயே தன் பள்ளிப்படிப்பையும் முடித்தார். 1954-ல், காஜா ஸ்ரிட்பில், அபுஜிகாத் தனது நெடிய போராட்ட வாழ்வில் இறுதி காலம்வரை துணைவந்த யாசர் அராபத்தை சந்தித்தார். 1956-ல் எகிப்துக்குச் சென்று அலெக்ஸான்ட்ரியா பல்கலைக் கழகத்தில் படிப்பைத் தொடர்ந்தார். பிறகு சவுதி அரேபியாவிலும், குவைத்திலும் வேலை செய்தார்.

குவைத்தில் தான் செய்த வேலையை உதறிவிட்டு பாலஸ்தீன விடுதலைக்கான ஒரு போராட்டக் குழுவை அங்கே நிறுவி அதற்கு தலைமையேற்று நடத்தினார். அக்கால கட்டத்தில் பல்வேறு இடங்களில் பலப்பல பாலஸ்தீன போராட்டக் குழுக்கள் இயங்கி வந்தன. இவ்விதமாய் சிதறிக் கிடக்கும் விடுதலை சக்திகளை ஒருங்கிணைக்கவும், வெகுஜனங்கள் மத்தியிலும், சர்வதேச அளவிலும் போராட்டத்திற்கு ஆதரவைவென்றெடுக்கவும், மக்களின் புரட்சியாற்றலை செயலுக்குத் திருப்பவும், ஒரு திறன்மிக்க தொடர்புச் சாதனம் தேவைப்படுவதை அபுஜிகாத் உணர்ந்தார். ப்லாஸ்டினுனா (Filastinuna—Our Palestine) எனும் புரட்சிகரப் பத்திரிக்கையைத் தொடங்கி அதற்கு ஆசிரியராய் பொறுப்பேற்று நடத்தினார். அதில் பல அரசியல் கட்டுரைகளை எழுதினார்.



இந்தக் காலகட்டத்தில்தான் அபுஜிகாத்தும், யாசர் அராபத்தும் இணைந்து ஃபாத்தா (Fatah) எனும் பாலஸ்தீன தேசிய விடுதலை இயக்கத்தை நிறுவினார்கள். பிறகு அனைத்து விடுதலை சக்திகளையும், பாலஸ்தீன விடுதலை அமைப்பு (PLO) எனும் 'ஒரே மையத்தைச் சுற்றி' ஒன்றிணைத்தார்கள்.

ஃபாத்தா இயக்கத்தை பாலஸ்தீன விடுதலை அமைப்பில் வேர் கொள்ளச் செய்ததிலும், பாலஸ்தீன மக்களது பொது வாழ்வின் சகல தளங்களிலும் பி. எல். ஓ.வின் பிடிப்புகளை உறுதிப்படுத்துவதிலும், ஒழுங்கின்றிச் சிதறியிருந்த பாலஸ்தீனத்தின் பல்வேறு வகுப்பினரை, ஒரே கருத்து நிலையில், பி. எல். ஓ. வின் தலைமையின் கீழ் கொணர்வதிலும் அபுஜிகாத் பிரதான பங்காற்றினார்.

1963ல் அல்ஜீரியாவிற்குச் சென்று 'ஒரு அரபு நாட்டில் முதன் முதலாக அமைக்கப்பட்ட' பாலஸ்தீனப் புரட்சி செயலகத்திற்கு தலைமைப் பொறுப்பேற்றார். அங்கிருந்த வாறே, கடின முயற்சி எனும் தன் குணச் சிறப்பால், பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கும் சர்வதேச புரட்சிகர சக்திகளுக்கும் பரஸ்பர கருத்தொற்றுமை கூடிய தொடர்பை அறுக்க முடியாத பந்தமாய் நெய்தார்.

சீனாவுடனும் கியூபாவுடனும் மற்றும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளின் போராட்ட இயக்கங்களுடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர் கொண்டிருந்த தொடர்புகளும் நட்புறவும் பிரசித்தி பெற்றவை. மாசேதுங், சூயென்லாய், சேகுவாரா, ஜெனரல் கியாப், பிடல் காஸ்ட்ரோ போன்ற உலகெங்குமுள்ள பல புரட்சித் தலைவர்களின் அவதானிப்புக்கும், வரவேற்புக்கும், அன்புக்கும் பாத்திரமாகி புகழ்பெற்றார். சீனா, வியட்நாம் வட கொரியா, இந்தியா, பாகிஸ்தான், யூகோஸ்லாவாகியா மற்றும் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்து பாலஸ்தீனப் போராட்டத்திற்கு ஆதரவு சேர்த்தார். விடுதலை அடைந்த ஜிம்பாப்வே நாட்டினருக்கு பி. எல். ஓ. பயிற்சி முகாம்களில் இராணுவப்பயிற்சி அளித்தார். ஒரு விடுதலை பெற்ற நாட்டின் இராணுவத்தை நிர்மாணிக்கும் பொறுப்பை ஒரு விடுதலைப் போராட்ட இயக்கமே ஏற்று நிறை வேற்றியது என்பது உலக வரலாற்றில் சிறப்புக்குரிய முதல் நிகழ்ச்சியாகும்.

1965-ல் ஃபாத்தா இயக்கம் மேற்கொண்ட ஆயுதப் போராட்டத்தின் சரியான திசையமைவை தீர்மானிக்க வேண்டிய அவசியத்தால், அபுஜிகாத் அல்ஜீரியாவிலிருந்து சிரியா - டமஸ்கஸ்சிற்கு சென்றார்.

- ஃபாத்தாவின் 'முதல் மத்திய செயற்குழுவில்' உறுப்பினர்.
- மக்களை அணி திரட்டி வலுமிக்க இராணுவப் பிரிவை கட்டமைக்கும் பொது ஆணைக் குழு உறுப்பினர்.
- வெளிநாட்டில் இயங்கிய பாலஸ்தீன தேசிய ஆலோசனை சபை (PNC) உறுப்பினர்.
- உயர் இராணுவ ஆலோசனை சபையின் (HMC) துணைத் தலைவர்.
- இராணுவத் தளபதி.
- ஆக்கிரமிப்புப் பிரதேசங்களுக்கான செயல் தலைவர்.



என பலப்பல பதவிகளில் நின்று, தனக்குரிய கடமைப் பொறுப்பின் கட்டுக்குள் செவ்வனே இயங்கினார். மேற் கண்ட பதவிகளில் பணியாற்றியதன் வாயிலாய், அபுஜிகாத் பாலஸ்தீன வரலாற்றின் மேதமைமிக்க வீரஞ்செறிந்த தன் போராட்ட அனுபவங்களை மக்களோடு பகிர்ந்தார். இந்த அனுபவங்கள் உலக அளவிலும் முக்கியத்துவம் பெற்றவை. அவர் 'உறுதிப்படுத்திய போராட்ட அனுபவங்களை' உல கெங்குமுள்ள புரட்சியாளர்கள் தமது பணிகளின் நம்பிக்கைக் குரிய ஆதாரமாக கருதுகிறார்கள். அபுஜிகாத்தின் இயல் பான சுபாவம் வீரத்தில் திளைத்திருந்தது. ஜோர்டான், தெற்கு லெபனான், பெய்ரூட், திரிபோலி போன்ற போர் முனைப் பகுதிகளில் மக்களை தற்காப்பதிலும், போரை முன்னோக்கி எடுத்துச் செல்வதிலும் அவர் கையாண்ட அணுகுமுறைகளிலிருந்து 'மக்கள் போராளிகள்' அவரின் தனிச் சிறப்பான போர்த் தந்திரத்தையும், வீரதீரத்தையும் கற்கின்றனர்.

பாலஸ்தீன விடுதலை அமைப்பின் எதிர்கால வளர்ச்சி யில் அளப்பரிய ஆர்வம்; அயராத உழைப்பு; யுத்தத் தளங் கள் மீதான இடையறாத கண்காணிப்பு; அயலகப் போராட்ட ஆதரவு சக்திகளைத் திரட்டுவதில் செலுத்திய ஆழ்ந்த அக் கறை ஆகிய சிறப்பு அம்சங்களின் மொத்த உருவாய் அபுஜிகாத் ஒரு பிறவித் தலைவராக விளங்கினார்.

போராட்டத்தின் ஒவ்வொரு கால கட்டத்தையும் ஆராய்ந்து, சமூகத்தின் புரட்சி நிலைகளை சரியாக மதிப் பிட்டு, தேச நிலைமையை மென்மேலும் புரட்சிகரமாக்கப் பாடுபட்டார். இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற 'துப்பாக்கிச் சித்தாந்தத்திற்கு எதிரான ரகசிய செயல் திட்டங்களை காலச் சூழலுக்கேற்ப வகுத்து வெற்றிகரமாய் நிறைவேற்றினார். இரகசியப் போர் முறைகளை முற்றிலும் புதிதாய் உருவாக்கு கின்ற உயரிய யுத்தக் கலைத்துவம் அவரது தனித்துவமிக்க இயல்பாய்ச் சிறந்தது.

அ—2

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1968-ல் ஜோர்டான் நதி வழியாக வந்த இஸ்ரேல் ஆக்கிரமிப்பாளர்களை உள்ளே நுழையவிடாமல் கெரில்லாக்கள் எதிர்ப்புப் போரில் இறங்கினார்கள். இந்த தீரமிக்க கெரில்லா நடவடிக்கைகளை லெபனான் மற்றும் சிரியாவின் எல்லா யுத்தப் பிரதேசங்களுக்கும் தன் நேரடி மேற்பார்வையின் கீழ் அபுஜிகாத் வழி நடத்தினார்.

போராட்டம் முதிர்ச்சியடைந்த ஆரம்ப காலத்தில் 1971-ல், மக்கள் பேரெழுச்சியை நசுக்க முயலும் இஸ்ரேலின் அசுர பலங்கொண்ட இராணுவத்தை முறியடிக்க வேண்டுமென்றால், பாலஸ்தீன போராட்ட இயக்கம் ஆயுத வளமையில் உயர்வடைய வேண்டிய கட்டாயத்தை அபுஜிகாத் முன்னரே கணித்துச் செயல்பட்டார். பாலஸ்தீன விடுதலை அமைப்பிற்கு நவீன ஆயுதங்களை முதன் முதலாக அறிமுகப் படுத்தினார். ஆயுத சேகரிப்பிலும், தேவைப்படும் சமயத்தில் மட்டும் ஆயுதத் திறனை பிரயோகிக்கும் போர் தந்திரச் செயல் முறையிலும் தொடர்ந்து கவனப் செலுத்தினார்.

தோல்வியில் துவளவிடாமல் போராட்டத்தை 'உக்கிர நிலையிலேயே' உயர்த்திப் பிடித்திருக்க அபுஜிகாத் ஓய்வின்றி உழைத்தார். அவர் ஒரு சமயம் சொன்னார்: "வெற்றியையும் அதே சமயம் தோல்வியையும் ஒரு சேர நாம் சந்தித்து வருகிறோம். இது நமக்குப் பொருட்டல்ல. பாலஸ்தீனத்தின் விடுதலையை நோக்கிய போராட்டத்தை விடாது கைக்கொள்வதே நமக்குப் பிரதானம்".

நெடியதான போர்ப்பாதையில் தன்னை பின் தொடரும் சந்ததியரை புதிய வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும் பாலமாக....

1. 1948ல் தாய்நிலமான பாலஸ்தீனத்தை இழத்தல்.
2. 1950 களின் ஆரம்ப வருடங்கள் 'பெடாயின் போராளிகள்' இயங்கிய கால கட்டம்.
3. ஃபாத்தா விடுதலை இயக்கத்தின் வளர்ச்சி; 1960களில் கெரில்லா இயக்கம் உருவாதல்.
4. 1970களில் பாலஸ்தீன விடுதலை அமைப்பு (PLO) உலக முக்கியத்துவம் பெறுதல்.
5. லெபனான் 1982-ல் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு உள்ளான பிறகு, கஷ்டமிக்க புனர்நிர்மாண வேலைகளை மேற்கொள்ளுதல்.



—என பாலஸ்தீனத்தின் போராட்ட சகாப்தங்களின் மேற்கண்ட ஐந்து தூண்களில் உயர்த்தெழும்பிய மனிதப் பாலமாக அபுஜிகாத் வாழ்ந்தார்.

பாலஸ்தீன மக்கள் சொந்தத் தாய்நாட்டிலிருந்து மட்டுமல்ல, அரசியல் மற்றும் சமூக வாழ்வில் தமக்குரிய சொந்த அடையாளத்திலிருந்தும் வரலாற்றிலிருந்தும் அந்நியமாகி உழன்றபோது, அவர்களின் மனத்தில் தாய்நாடு மீட்புக்கான போராட்டத்தை ஜீவனான அம்சமாக துலங்க துணைபுரிந்தார். உலக அரங்கில் பாலஸ்தீனர்களின் ஜீவாதாரமான கோரிக்கைகளைப் பிரபலப்படுத்தினார்.

அபுஜிகாத்தினுடைய போராட்ட வாழ்க்கையின் துணைவியும் தோழருமாய் பெருமைப் பெற்றவர் இன்திஸ்சார் அல்-வாஷிர் ஆவார். தம் மூன்று ஆண், இரண்டு பெண் குழந்தைகளுடன் இல்லறம் சிறக்க இவர்களது குடும்ப வாழ்க்கையும் நடந்தது. ஆனால் 1964 ஆம் வருடத்தில் ஒரு நாள் இவர்களின் சின்னஞ் சிறு ஆண்குழந்தை சில மர்ம மனிதர்களால் பால்கனியிலிருந்து தரைக்கு வீசப்பட்டு கொலையுண்டது. இந்த ஈனத்தனமான குழந்தைக் கொலையை செய்தவர்கள் சிரியன் ரகசிய ஸ்தாபனத்தை சேர்ந்தவர்களென பின்னர் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அபுஜிகாத் சாந்தமான அணுகுமுறையாளராகவும், இறுகிய முகத்தோடும் தோற்றமளிப்பார். இந்தத் தோற்றம் அவரது இயல்பின் தத்ரூபமல்ல. இயல்பில் அவர் மனிதத்துவம் கொண்ட போராளி. பாலஸ்தீன விடுதலை அமைப்பின் அரசியலில், எந்தத் தனிப்பட்ட விளம்பரத்தாலும் தன் பெயரை பகட்டாக்கிக் கொள்ளாதவர். இதனால், ஃபாத்தா தலைவர்களில் அவரொரு 'quiet man' என நற்பெயர் பெற்றார்.

துன்ப துயரங்கள் செறிந்த உக்கிரமிக்க யுத்தகாலங்களில் கெரில்லாக்களின் நலவாழ்விற்கும் செயல்வன்மைக்கும் அபுஜிகாத் எப்போதும் துணை நின்றதால், கெரில்லாக்களின் இதயத்திற்கு மிகவும் நெருக்கமானவராய் அவரிருந்தார்.

ஆக்கிரமிப்பு நுகத்தடியை முறித்தெறிய எழுந்த பாலஸ்தீன போராட்டத்தை அபுஜிகாத் தன் மூலச்சிறப்புள்ள இராணுவ நிபுணத்துவத்துடன் திசைப்படுத்தினார். ஆக்கிரமிப்பு பிரதேசங்களின் தலைமை நிர்வாகி என்ற முறையில், இப்போது மேற்கு கரையிலும் (West Bank) காஜா ஸ்ரிட்பிலும் மக்கள் பேரெழுச்சித் தீ பற்றி எரிவதற்கு பின்புல காரணஸ்தராக இருந்தவர் அபுஜிகாத். இந்த எழுச்சியை ஒடுக்கும் வஞ்சனை முயற்சிகளில் தோற்றுப்போய், தனது இயலாமையில் விரக்தி கொண்ட இஸ்ரேல் அரசு, முடிவாய் 'எதிர்ப்புப் போரின் மூளையாக' செயல்பட்ட அபுஜிகாத்தை போராட்ட அரசியல் களத்திலின்று 'நிரந்தரமாக' அகற்றும் சதியை நிறைவேற்றியது.

அபுஜிகாத்தை கொலை செய்ய இஸ்ரேல் உளவு ஸ்தாபனமும் அதன் ஏஜெண்டுகளும் தொடர்ந்து மேற்கொண்ட பல முயற்சிகளின் இறுதியில், ஏப்ரல் 16 அதிகாலையில் அவர் கொல்லப்பட்டார். துணிவுமிக்கப் போராளியாய் அவர் வாழ்ந்ததைப் போலவே இறந்தார். கொல்ல வந்த பாலஸ்தீன மக்களின் எதிரிகளுக்கு முகங்கொடுக்கும்



எதிர்ப்பை தன் இறுதி மூச்சுவரை கையில் 'துப்பாக்கி' ஏந்தியவராய் அவர் இறந்தார்.

வாழ்வின் மீதான நேசமே பாலஸ்தீனியர்களை ஆயுதமேந்த நிர்ப்பந்தித்தது. போராட்டத்தில் அவர்கள் மரணத்தோடு வாழ்கிறார்கள். எனினும் மரணத்திற்கு அவர்கள் தரும் அர்த்தமென்ன? ஒரு பாலஸ்தீன கவிஞர் இப்படிச் சொல்கிறார்:

> "...மரணத்திற்கு எவ்வளவோ அர்த்தமிருக்கலாம். அவற்றில் முக்கியமானது உயிரை துச்சமாக மதித்து போராட்ட பலிபீடத்தில் வாழ்வை அர்ப்பணிப்பதே. இதுவே வாழ்க்கையை மிக ஆழ்ந்து புரிந்துகொண்டதற்கான அடையாளம்; தம்மேல் கிடந்து அழுத்தி நசுக்கும் அந்நியச் சுமையைத் தூக்கியெறிய, விடுதலை மீட்சிக்கான, போர்க்கோலம் பூண்டு நிற்கும் மக்களைப் புரிந்து கொண்டதற்கான அடையாளம். வாழ்க்கையை இவ்வகையில் புரிந்து கொள்ளலே, ஒரு போராளிக்கு தனது மக்களின் விமோசனத்திற்காக உயிர்த்தியாகம் செய்யவும் தயாராகும் மனவுறுதியை அளிக்கிறது..."

துப்பாக்கியும் சாவும் வேதனையும் கண்ணீரும் தம் வாழ்வைச் சூழ்ந்துள்ள வேளையில் அமைதி விரும்பிகளாக வாழ பாலஸ்தீனியர்களால் இயலவில்லை. அபுஜிகாத்தும் அகிம்சா வாதியாக இல்லை. வாழ்வின் மேலான அளப்பரிய நேசம் ஆயுதப் போரை அவர் எப்போதும் சார்ந்திருக்கத் தூபமிட்டது. தம் தாயகத்தில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு வேரூன்றியுள்ள நிலையில், கொடும் அடக்குமுறைகளிலிருந்து தம் மக்களை பாதுகாக்க வேண்டிய நிலையில், புரட்சிகர வன்முறையின் தேவை உணர்ந்து அவர் செயல்பட்டார். தன் இறுதி காலம்வரை சுறுசுறுப்பாக இயங்கினார். விடுதலை மீட்சியில் தாய்நாட்டின் சுதந்திர மூச்சை உணர எழுந்த போராட்டத்தில் தன் வாழ்வை அர்ப்பணித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அபுஜிகாத்தைக் கொல்லத் தீட்டிய சதித்திட்டத்தை அணுப் பிசகாமல் நிறைவேற்றிய சாகசத்தை, "அபுஜிகாத்தைக் கொன்ற வரலாற்றை" கொலைகார இஸ்ரேல் உளவுப் படையினர் வீடியோ படம் எடுத்துச் சென்றுள்ளனர். அபுஜிகாத் இருக்குமிடத்திற்கு எவ்வழியில் சென்றோம் அவரை எப்படிக் கொன்றோம்? அவரது மூளையிலும் இதயத்திலும் உடலிலும் துப்பாக்கி ரவைகள் ஏற்படுத்திய துளைகளின் ஆழ அகலம் எவ்வளவு? கொட்டிய இரத்தத்தின் நிறம் சிவப்பா அல்லது வேறா? என்பதையெல்லாம் இஸ்ரேல் அரசினரும், இராணுவத்தினரும், அமெரிக்க இராணுவ அதிகாரிகளும் கண்டு ரசிக்கத்தான் செய்வார்கள்; கண்டு கண்டு தமது கொலைவெறி சித்தாந்த அறிவை மேலும் மேலும் வளர்த்துக் கொள்வார்கள்!

வேண்டாம் இந்த விளக்கம். இதெல்லாம் பற்றி பாலஸ்தீனப் போராளிகளுக்கு கவலை இல்லை. ஏன் எனில் அவர்களிடையே அபுஜிகாத் இன்றும் வாழ்கிறார். மரணத்தால் அவரை கொல்ல முடியவில்லை. காற்று எடுத்துச் செல்லும் சாம்பலாகவோ மண் அரித்துத் தின்னும் சவமாகவோ இல்லாமல், அபுஜிகாத் பாலஸ்தீன மக்களின் நெஞ்சில் ஜீவனாக விளங்குகிறார். "உயிர்த் தியாகம் செய்த எமது தேசாபிமானிகளின் போர்ப்பாதையில் எமக்கு வழிகாட்டும் ஒளி தீபமாக திகழ்கிறார்கள்" என்று போராட்ட வாழ்வில் உயிர்துறந்த கொள்கை தியாகிகளைப் போற்றி அவர்கள் சென்ற சுவடுகளைப் பாலஸ்தீனர்கள் பின் தொடர்கிறார்கள்.

ஆம். அபுஜிகாத் கட்டியெழுப்பிய புரட்சி அலை பாலஸ்தீனமெங்கும் இன்னும் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது; மூட்டிய புரட்சித் தீ கனல் வீசி இன்னும் எரிந்து கொண்டிருக்கிறது. அபுஜிகாத்தின் மறைவோடேயே பாலஸ்தீன போராளிகளிடம் அவர் வளர்த்த போர்த்திறம் மடிந்துபோய் விடவில்லை.



ஆயினும் மக்கள் இராணுவத்தின் தலைமை எளிதில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை விட்டுவிட்டே அபுஜிகாத் சென்றிருக்கிறார் என்று சொல்லத் தோன்றுகிறது. ஏனெனில் இராணுவ அறிவிற் சிறந்த, யுத்தத் தந்திரக் கலைகளில் முதிர்ந்த அனுபவம் கொண்ட ஒரு போராளித் தலைவரை பாலஸ்தீனம் இழந்து நிற்கும் அனாதரவான நிலையைத்தான், அபுஜிகாத்தின் மறைவுக்குப் பின் அங்கு நடந்தேறும் நிகழ்ச்சிகள் புலப்படுத்துகின்றன.

சிரியா அரசின் கைக்கூலிகளாக மாறிப்போன அபுமுசா கும்பல், கடந்த மாதம் பெய்ரூட்டிலிருந்த பாலஸ்தீன விடுதலை இயக்கப் ஃபாத்தாவின் முக்கிய இராணுவத் தளத்தை பலத்த போருக்குப் பின்பு தகர்த்தழித்து விட்டது. மேலும் அங்கே ஃபாத்தாவின் கட்டுப்பாட்டிலிருந்த அகதி முகாமையும் தாக்கி பலரை படுகொலை செய்துள்ளது. தாக்குதலின் முடிவில், தெற்கு லெபனானுக்குள் மட்டுமே ஃபாத்தா இயங்கக் கூடிய சாத்தியத்தை ஒரு ஒப்பந்தத்தின் பேரில் அபுமுசா ஏற்படுத்தியுள்ளது.

இதே வேளையில் மேற்குகரை (West Bank), காஸா (Gaza) பகுதிகளுக்கு பாலஸ்தீன விடுதலை அமைப்பு பொறுப்பேற்க வேண்டுமென்றும், அப்பகுதிகளை ஜோர்டானிலிருந்து விடுவிப்பதாகவும் ஜோர்டான் மன்னர் ஹுசைன் அறிவித்துள்ளார். அப்பகுதிகளில் அபுஜிகாத் வழிநடத்திய போராட்டம் அவரது மறைவுக்குப் பின்னும் இன்றும் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. அடிமைத் தளையினின்றும் மீளும் வெறியோடும், யுக மாற்றத்தைக் கோரும் சீற்றத்தோடும் மக்கள் எழுச்சி அங்கே வீராவேசம் கொண்டிருக்கிறது. இந்தப் பேரெழுச்சியும், ஜோர்டான் மன்னரின் அறிவிப்பும் "அயல்நாட்டில் இயங்கும் பாலஸ்தீன அரசை" (Government in exile) உடனடியாக அப்பகுதிகளில் நிறுவ வேண்டிய இடர்மிகுந்த நிர்ப்பந்தத்திற்கு பி. எல். ஓ.வை தள்ளியுள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதுபோன்ற சிக்கலான சூழ்நிலைமைகள் எழுந்த போதெல்லாம், பிரச்சனையின் பரிமாணத்தைப் பூரணமாக உணர்ந்து, இடர்ப்பாடுகளை இடையூறுகளை அகற்றி, போர்ப் பாதையை சீரமைத்து, பாலஸ்தீன விடுதலை அமைப்பை வழிநடத்தும் தலைவராய் அபுஜிகாத் இருந்தார். இராஜதந்திரத்திலும், இராணுவக் கலையிலும் தனிச்சிறப்பான புகழ் கொண்டிருந்த அபுஜிகாத் எனும் மகத்தான தன் புதல்வனின் பெருமையை இன்று பாலஸ்தீனம் உணர்கிறது. அவர் வழிகாட்டிய போர்ப்பாதை பாலஸ்தீன மக்களை 'முட்களிலிருந்து நட்சத்திரங்களுக்கு' நிச்சயம் அழைத்துச் செல்லும்; பிரச்சனைகள் மீதான அவரின் கூர்மையான கண்ணோட்டத்தை பாலஸ்தீன விடுதலை அமைப்பு விடாது கைக்கொண்டு இன்றையச் சூழலின் சிக்கல்களை களைந்தெறியும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

அபுஜிகாத் சர்வதேசமெங்கும் உள்ள விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்கு விளையும் பிரச்சனைகள் குறித்தும் நேரடியாக கவனம் செலுத்தியவர் என்பதை அவரோடு வாழ்ந்து பழகியதன் வாயிலாய் நாங்கள் உணர்ந்திருக்கிறோம். குறிப்பாக ஈழப் போராட்டத்தின் மீது காட்டிய தனி அக்கறையாலும், பல்வேறு சந்தர்ப்பங்களில் ஈழச் சூழ்நிலையைப் புரிந்து வழங்கிய தமது ஆலோசனைகளாலும் அபுஜிகாத் என்றென்றும் எம் நினைவில் வாழ்வார்.

அவரை முதன்முதலாகச் சந்தித்த இடம்...ஃபாத்தாவின் கட்டுப்பாட்டுக் குள்ளிருந்த அந்தத் தொழிற்சாலை...அங்கே நிகழ்ந்த சந்திப்பு...அவரது கம்பீரயம், கைகுலுக்கல், விசாரிப்புகள் எல்லாம் இப்போது எம் கண்ணருகே நிழலாடுகிறது.

எமது கறுத்த துக்கம் படிந்த நிழல்கள்....

ஈழத் தமிழினம் அடிமை இருளில் அழுந்திக் கிடந்து மரணமூச்சு விட்ட காலத்தில், கவிந்திருக்கும் அந்த இருளை



அகற்ற எமது தேசத்து ஜீவனில் சுதந்திர எழுச்சி முளைவிட்டது. இவ்வேளையில், விடுதலைப் போரை தீரத்தோடும் ஒழுங்கமைவோடும் கொண்டு செல்ல வேண்டிய, எழுச்சி கொண்ட ஈழத் தமிழ் மக்களை ஆயுதவீரர்களாக தயார்ப் படுத்த வேண்டிய அவசர அவசியம் எங்களுக்கு ஏற்பட்டது. இந்த அவசியத்தை உணர்ந்து கொண்டதோடு மாத்திரமல்ல; ஈழப்போராட்டத்தின் மற்றத் தேவைகளையும் கேட்டறிந்து அவற்றை நிறைவேற்றி எங்களுக்கு அபுஜிகாத் பெரிதும் துணைநின்றார்.

எங்கள் ஈழப் புரட்சி அமைப்பை (EROS) தவிர போராட்டத்தை முன்னெடுக்க எழுந்த மற்றொரு இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE). ஈழப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் இந்த இரு இயக்கங்களே செயல்பட்டு வந்தன. பாலஸ்தீன விடுதலை அமைப்புடன் (PLO) எங்களுக்குள்ள நெருக்கமான தொடர்புகளை LTTE இயக்கத்தினரிடம் சொல்லி, அவர்களில் சிலரையும் இராணுவப் பயிற்சிக்கென்று பெய்ரூட்டுக்கு அனுப்பினோம்.

அவ்வாறு பயிற்சிக்கு நாங்கள் அனுப்பி வைத்தவர்களில், இன்றைய தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (PLOT) செயலதிபர் உமாமகேஸ்வரனையும் (இவர் அப்போது LTTE-யில் இருந்தவர்) ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) செயலதிபர் பத்மநாபாவையும், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் (EPDP) செயலதிபர் டக்ளஸ் தேவானந்தாவையும் (இந்த இருவரும் அப்போது ஈரோசில் இருந்தவர்கள்) குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஈழத்திலிருந்த எமது மற்ற தோழர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கத் தேவையான சாதனங்களைத் தர அபுஜிகாத் மனமுவந்து சம்மதித்தார். இந்தக் காலத்தில்தான் லெபனானை இஸ்ரேலியப் படைகள் முற்றுமாய் ஆக்கிரமித்தது; பி. எல். ஓ-வின் விடுதலைச் சக்திகளை லெபனானி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லிருந்து அகற்றியது. அராபத், அபுஜிகாத் ஆகிய முக்கிய தலைவர்களெல்லாம் அரபு நாடுகளுக்கு வெளியேறினார்கள். இத்தகைய அரசியல் நிலைமை பி. எல். ஓ. வுடன் எங்களுக்குள்ள தொடர்புகளை இடைநிறுத்தம் செய்தது.

இனக்கலவரங்களும், தேசிய இன விடுதலைப் போராட்ட அலையும் பொங்கிப் பிரவகித்த 1983 ஆம் ஆண்டில் நாங்கள் அப்போது காலடி எடுத்து வைத்தோம்.

1984-ல் ஜோர்டானிலிருக்கும் அம்மானில் பாலஸ்தீன தேசிய சபை (PNC) கூடியபோது நான் அங்கே செல்லும் வாய்ப்பைப் பெற்று அபுஜிகாத்தைச் சந்தித்தேன். அவர் அதுவரை கால ஈழப் போராட்டக் கட்டங்களையும், திருப்பங்களையும், மாற்றங்களையும் கேட்டறிந்து என்னிடம் தீர்க்கமாய் விவாதித்தார். எமது அடுத்த கட்டப் போராட்டத்தின் தேவைகளை நிவர்த்தி செய்ய இணங்கினார். ஆயுத உதவி, நிதி உதவி அளிக்கவும் சம்மதித்தார். இவற்றினும் மேலாக ஈழப் போராட்டத்தை நெறிப்படுத்துகிற, தீர்மானகரமானப் பாதையில் இட்டுச் செல்லுகிற ஆலோசனைகளை அளித்து உதவினார்.

இதற்கிடையில் ஈழப் பிரச்சனையில் இந்தியத் தலையீடு நேர்ந்ததன் காரணமாக ஆயுத மற்றும் நிதி உதவிகளை முழுநிறைவாய் பி. எல். ஓ-விடமிருந்து பெறமுடியாமல் போனது. எனினும் நெருக்கடி துளைத்த காலங்களில் பி. எல். ஓ.வின் தொடர்பு அவ்வப்போது எங்களுக்கு உதவிகரமாய் அமைந்தது. 84 ஆம் ஆண்டிலேயே மற்றொரு முறை நானும் தோழர் ரத்னாவும் அம்மான் சென்று அபுஜிகாத்தைச் சந்தித்து ஈழப் பிரச்சனை குறித்து கலந்துரையாடினோம்.

84-ல் மூன்றாவது முறையாக அபுஜிகாத்தை நான் அம்மானில் சந்தித்தேன். அங்கிருந்து டுனீஷ், பாக்தாத் ஆகிய இடங்களுக்கு அவருடனேயே சென்றேன். பிரயாணங்களின் போது தம் மக்கள் மீதான அவருடைய அளவிலா அன்பும், சர்வதேச மனிதகுலப் பிரச்சனைகளில் அவர் காட்டும் பேரார்வமும் வலுவாக வெளிப்பட்டது. இவ்வேளையில்தான் ஜோர்டான் அரசின் இராணுவ அதிகாரிகளுடனும், ஈராக் இராணுவ அதிகாரிகளுடனும், ஈழப் போராட்டத்தின் அவசியத்தையும், அதன் தேவைகளையும் பற்றிப் பேசும் வாய்ப்பை அபுஜிகாத் எமக்கு ஏற்படுத்தித் தந்தார். ஈராக் அதிகாரிகள் 'விமான எதிர்ப்பு ஏவுகணைகளை' இயக்கத் தேவையான பயிற்சியை எங்களுக்கு அளிக்க இசைந்தார்கள்.



எங்களது அறிக்கைகள், பத்திரிகைகள், கட்டுரைகள் முதலியவற்றை லண்டன் தூதர் ஷேக் அல்வைதா மற்றும் டில்லி தூதர் ஷேக் காலீத் ஆகியோர் வாயிலாக அபுஜிகாத்திற்கு அனுப்பி வைப்போம். தேவைப்படும் போது அவரிடமிருந்து தன்னைச் சந்திக்கும்படி அறிவிப்பு வரும். அத்தகைய நேரங்களில் டுனீஷ், அல்ஜியஸ், பாக்தாத் போன்ற அவரது தங்குமிடங்களுக்குச் சென்று பலமுறை சந்தித்து திரும்பினேன்.

இடையில் நிலவிய நெருக்கடி மிக்க அரசியல் சூழ்நிலைகளின் நிமித்தம் எங்களின் சந்திப்பு நேராமல் ஒரு யுகமே புரண்டதுபோல் சில வருஷங்கள் கழிந்தன. தமிழ் நாட்டில் எமது பயிற்சி முகாம்கள் இயங்கிக் கொண்டிருந்த காலகட்டம் அது. அப்போது ஒரு நாள் அபுஜிகாத்தால் ரகசியமாக அனுப்பப்பட்ட ஹாசன், மஹ்மூத், லூத்ஃபீர் எனும் அவரது மூன்று பிரதிநிதிகள் வந்து எங்களைச் சந்தித்தார்கள். அவர்கள் கொண்டு வந்த செய்தி எங்களை வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியது.

அபுஜிகாத் தந்தனுப்பிய செய்தி இது தான் : "...எங்கள் மாணவர்கள் பலர் இந்தியா மற்றும் இந்தியாவைச் சுற்றிலுமுள்ள நாடுகளில் பயின்று வருகிறார்கள். படிப்பு முடிந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இங்கே திரும்பும்போது அவர்கள் ஆயுதப் பயிற்சி பெற்றிருப்பது அவசியமென்று நாங்கள் கருதுகிறோம். குறிப்பாக மேற்கு கரைக்கு (West Bank) திரும்பும் மாணவர்களுக்கு பயிற்சி மிக மிக அவசியம். ஏனெனில் அவர்கள் இடையில் ஈராக், டுனிஷ், அல்ஜியஸ், ஏமன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இயங்குகிற எங்களது பி. எல். ஓ. பயிற்சி முகாம்களில் பயிற்சி பெற்று திரும்பினால், அது இஸ்ரேல் அரசினரிடம் சந்தேகம் எழ வாய்ப்பளிக்கும். ஆகவே நமக்கிடையேயான பரஸ்பர புரிந்துணர்வின்படி, அந்த மாணவர்களுக்கு பயிற்சி அளித்துதவ நீங்களே சரியானவர்களென்று நாங்கள் நம்புகிறோம். மாணவர்களில் பயிற்சிக்குத் தகுந்தவர்களை நாங்களே தேர்ந்தெடுத்து அனுப்புவோம்..."

ஈழப் போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் அதன் போராளிகளுக்கு முதன் முதலாக ஆயுதப் பயிற்சியை தந்தவரிடமிருந்து—பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முதல் ஆயுத பயிற்சி முகாமை நிறுவியரிடமிருந்து — இராணுவ யுத்தத் தந்திரக் கலைகளில் உலகு அளாவிய கீர்த்தி கொண்டவரிடமிருந்து இப்படியொரு கோரிக்கை வருமென்று நாங்கள் எதிர்ப்பார்ககவில்லை. எனினும் அபுஜிகாத்தின் வேண்டுகோளை கட்டளையாக ஏற்றோம்.

படிப்பு முடிந்து நாடு திரும்பும் முன்னர் பாலஸ்தீன மாணவர்களில் சிலர் எங்களை வந்து சந்தித்தார்கள். பி. எல். ஓ. வுக்கும் எங்களுக்கும் இடையேயான உட்தொடர்பையும் பரஸ்பர சார்பையும் கருதி, ஒரு சர்வதேச கடமையாக எண்ணி, எங்களால் முடிந்த அளவில் அவர்களுக்கு உதவினோம். அந்த மாணவர்கள் அபுஜிகாத்தை தமது வீரஞ் செறிந்த நாட்டின் உருவமாக காண்பதாய்ச் சொன்னார்கள். அவர்கள் அனைவரின் நெஞ்சிலும் தமது தாயகத்தை நெறுக்கிப் பிணைத்திருக்கும் அடிமை வளையத்தை நொறுக்கி எறியும் விரசபதம் முழங்குவதை உணர்ந்தோம்.

அபுஜிகாத்தின் மறைவுக்குப் பிறகு பாலஸ்தீன போராட்டக்களத்தில் 'மாபெரும் சூன்யத்தை' இஸ்ரேல் அரசு எதிர்பார்ப்பது படுமூடத்தனம். அந்த மாணவர்களைப் போன்று ஆயிரமாயிரம் அபுஜிகாத்துகள் அடங்கிய, புதிய போராட்ட சந்ததியினரை தீர்மானகரமான பாதையில் தன் பணி தொடர அவர் விட்டுச் சென்றிருக்கிறார்.



அபுஜிகாத்தின் போராட்ட வாழ்க்கை முறை பாலஸ்தீன தேசிய பிரக்ஞையில் பிரிக்கமுடியாதபடிக்கு ஒன்றியிருக்கிறது; உலக அளவில் மக்கள் போராளிகளை ஆகர்ஷிக்கிறது. இன்றைய ஈழ அரசியலின் சிக்கல் மிகுந்த நெருக்கடிச் சூழ்நிலையில் அவரின் மறைவை பேரிழப்பாக ஈரோஸ் உணர்கிறது. ஒரு இனிய தோழரை இழந்த சோகம் என்னைச் சூழ்ந்துள்ளது.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்படுவதற்கு சில மாதங்களுக்கு முன், 1987 ஏப்ரலில், பாலஸ்தீன தேசிய சபை அல்ஜியஸில் கூடிய நாளில் நான் அபுஜிகாத்தை சந்தித்து உரையாடியதை இத்தருணத்தில் நினைவுகூர்கிறேன். விடைபெறும்போது கைகுலுக்கி, வாழ்த்து கூறி, மறுபடியும் விரைவில் என்னை சந்திக்க விழைவதாகக் கூறினார்.

அந்தோ...! அதுவே எங்களின் கடைசி சந்திப்பாக முடிந்து போனது. நம் இதயத்தில் கொந்தளிப்பை எழுப்பும் அவரின் மரணம் நேர்ந்தது.

ஆனால் மரணத்தின் பின்னும் நம் நினைவுகளில் அவர் சாகாதிருக்கிறார். அவரை நான் கடைசியாக சந்தித்த போது அவரிருந்த நிலை என்றென்றும் அழியாத நினைவு...

இன்றும்கூட, உறுதியும் நேசமும் இழையும் அவருடைய குரல் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

வாஞ்சை மிகுந்த அவரது கைகுலுக்கலை இன்னும் நான் ஸ்பரிசிக்கிறேன்....

தோழமை பூத்துத் தவழும் அவரது புன்னகையை இன்னும் நான் காண்கிறேன்.... □

www.tamilarangam.net


*தமிழ் மண்ணில் வேரூன்றி மானுட மேன்மைகளை*
*உயர்த்திப் பிடிக்க*

ஒவ்வொரு மாதமும்
வெளி வருகிறது
நட்புறவு

# பாலம்

□

*கனவுகளின் இடத்தை நிஜங்கள் கைப்பற்றப்*
*போராடும் கலை இலக்கிய கருத்துப் போராளி*

# பாலம்

□

**இதழ் தோறும் ஈழம் பற்றிய**
**நேரடிச் செய்திகள்**

□

தனி இதழ் ரூ. 2-00 ஆண்டுச் சந்தா ரூ. 25
சந்தா செலுத்தி
துணை நில்லுங்கள்

முகவரி :

## பாலம்

12, முதல் பிரதான சாலை நேரு நகர்
அடையாறு சென்னை-20


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

